கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, பெயரும் ஆங்கிலத்திலே எழுதப்பட்டிருக்கிறது. அன்று நான், ஆங்கிலத்திலே கூடு களோ, மற்றவைகளோ என் மேஜைக்கு வந்தால் கிழித்தெறி வேன் என்று சொல்லியிருக்கிறேன். தமிழ் நாட்டிலே தமிழுக்கு முன்னுரிமை வேண்டுமென்ற காரணத்தினால், எனக்கு ஆங்கிலத் தில் அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிற இந்தக் கூட்டை உங்கள் முன்னால் கிழித்தெறிகிறேன். (ஒரு கூட்டை கிழித் தெறிந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உணர்வு களை நான் உணருகிறேன். இனி கூடுகளைத் தமிழில்தான் அச்சடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன். ஏற்கனவே இப்படிப்பட்ட கூடுகள் ஆயிரக்கணக்கில் அச்சடிக்கப்பட்டிருக் கின்றன. அவை வீணாகக்கூடாது என்று சொல்லியிருக்கிறார் கள். இருந்தாலும், தாங்கள் என்னிடம் வந்து பேசிவிட்டுப் போன பிறகு, அதைக் கூட உபயோகிக்கக் கூடாது என்று நான் உடனே உத்தரவிட்டிருக்கிறேன். தமிழிலே அச்சடித்த கூடு களைத்தான் இனிமேல் பயன்படுத்த வேண்டுமென்று உத்தர விட்டிருக்கிறேன். ஆகவே, தாங்கள் கோபத்தோடு இருக்க வேண்டாம். மிகவும் ....

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : என் பெயர் டைப் செய்யப் பட்டிருப்பதுகூட ஆங்கிலத்திலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கோபத்தோடு இருக்க வேண்டாம். எல்லாம் படிப்படியாக தமிழிலே கொண்டு வரப்படும்.

(உ) ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங் கள் குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள நல்லிப்பாளையத்தில் உள்ள மிராசுதார், அங்கே மாட்டுக் கொட்டகையில் வைத்து தண்ணீரை 16 வயது அரிசனப் பெண் குடித்து விட்டாள் என்பதற்காக அடித்துக் கொலை செய்து அந்தப் பிரேதத்தை மறைத்ததாகவும் அதற்காக அங்குள்ள அரிசன மக்கள் எல்லாம் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று.........(மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தது என்னவாயிற்று என்று கேட்டாலே போதும். பரவாயில்லை. விளக்கமாகச் சொல்லுங்கள் என் றால், அதை உரையாக இழுக்கிறீர்கள். இன்னும் அதற்கான பதில் என் கையில் வரவில்லை. அது வந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, 19-ம் தேதி இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்தேன். ஒன்றைத்தள்ளிவிட்டார்கள். இன்னொன்று........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று கடைசி நாளாக இருப்பதால் நீங்கள் கேட்கின்ற, எதிர்பார்க்கின்ற பதில்கள் இன்றே கிடைக்க வேண்டுமென்பது நியாயம் என்று உணருகிறேன். ஆனால், என் அறைக்குப் பதில் வரவில்லை. பதில் வந்தவுடன் அவையில் வைக்கலாம்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவரவர்களே, திருச்சி சிறைச்சாலையில் குடந்தை கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் உண்ணா விரதம் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை ......(மணியடிக்கப்பட்டது).

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, இளையாங்குடி பகுதியில் விவசாயிகளிடத்திலே கூட்டுறவு அதிகாரிகள் கடுமையான முறையிலே ஜப்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அது சம்மந்தமாக ஏற்கனவே 42-வது விதியின்கீழ்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்னாலிருந்த உறுப்பினருக்கு சொன்ன பதிலையே இதற்கும் சொல்கிறேன்.

திரு. செ. சிவசாமி: அதோடு, கேரளாவிற்கு ஆடு மாடுகள் அனுப்புவது சம்பந்தமாகவும் நான் 42-வது விதியின்கீழ் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதோடு, சிமெண்ட் கலப்படத்தைப் பற்றி இதே அவையிலே சுட்டிக்காட்டினேன். அதையே காட்டினேன். கெமிக்கல் அனலிசிஸ் பண்ணி பிறகு முடிவைச் சொல்வதாகச் சொல்லப்பட்டது. இதுவரை எந்த விதமான நடவடிக்கையும்.....(மணியடிக்கப்பட்டது).

(ஊ) கல்லூரி ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சட்டமன்றத்தின் தொடர் கூட்டம் இன்றோடு முடிவடைகிறது. கடந்த சில நாட்களாக கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்து அது சம்பந்தமாக அரசு தரப்பிலேயிருந்து பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அது வெற்றிகரமாக முடிந்து சமரசம் ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். தோல்வி இன்றைய தினம் பத்திரிகையில் பார்க்கும்போது அது ஆனால்,